## ‘எல்லோருக்கும் எல்லாம்’ என்கிற மகத்தான லட்சியத்தோடு ஆட்சி நடத்தியவர் எங்கள் தலைவர்!

### தீப்பெட்டி – பட்டாசுத் தொழிற்சாலைகளை

# தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்காமல் ஆய்வு நடத்துவீர்!

## சட்டப்பேரவையில் கழக உறுப்பினர் சாத்தூர் அ.கடற்கரைராஜ் பேச்சு!

**சென்னை, செப். 5 -**

**“தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்காத வகையில் தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளை ஆய்வு செய்ய வேண்டும்” என்று சட்டப் பேரவையில் கழக உறுப்பினர் சாத்தூர் அ.கடற்கரைராஜ் வலியுறுத்தினார்.**

பேரவையில் அ.கடற்கரைராஜ் அவர்கள் பேசியதாவது:

தமிழ், தமிழர், தமிழ்நாடு என்கிற அடையாளங்களையும், அவர்களின் வளர்ச்சியையும் உறுதி செய்ய தன் வாழ்நாளெல்லாம் உழைத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். நவீன தமிழ்நாட்டை தன் தொலைநோக்குத் திட்டங்களாலும், சட்டங்களாலும் செதுக்கிய தலைவர் கலைஞர் அவர்களுக்கு முதற்கண் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எல்லோருக்கும் எல்லாம் என்கின்ற மகத்தான சமத்துவ இலட்சியத்தோடு திராவிட மாடல் ஆட்சியை நடத்தியவர் எங்கள் தலைவர் முன்னாள் முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டின் மண், மொழி, மானம் காக்க தொடர்ந்து போராடியவர், போராடுபவர் சமூக நலத் திட்டங்களிலும், பொருளாதார வளர்ச்சியிலும் தமிழ்நாட்டை இந்தியாவிற்கே முன்னோடியாக கட்டமைத்தவர்; நாம் வாழும் நிலத்தை அங்குலம், அங்குலமாக செதுக்கியவர்; மகத்தான தலைவர் அவர்களுக்கு என் முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எந்த அடக்குமுறைக்கும் அஞ்சாமல், எவ்வளவு அதிகாரம் மிக்கவர்கள் என்றாலும் அநீதியை அநீதி என்று சொல்லும் துணிச்சலுக்குச் சொந்தக்காரர். திராவிட இயக்கத்தின் நம்பிக்கை மிகு எதிர்காலம், எங்களை வழிநடத்தும் இளம் தலைவர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், (மேசையைத் தட்டும் ஒலி) எனக்காக பாடுபட்டு வாக்கு சேகரித்த எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**வாய்ப்பளித்த சாத்தூர் தொகுதி மக்களுக்கு நன்றி!**

எங்கள் மண்ணோடும், மக்களோடும் இரண்டற கலந்து எங்கள் மாவட்டத்தின் மாவட்டக் கழகச் செயலாளர்கள், முன்னாள் அமைச்சர்கள் மாண்புமிகு அண்ணாச்சி திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன் அவர்களுக்கும், முன்னாள் அமைச்சர் அண்ணாச்சி திரு. தங்கம் தென்னரசு அவர்களுக்கும், சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கும், எங்கள் கொறடா அவர்களுக்கும், துணைக் கொறடா அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வரலாற்றுப் பெருமிதமும், தனித்தன்மையும் வாய்ந்த சிறப்புமிக்க இந்தப் பேரவையில் பணியாற்றும் வாய்ப்பை எனக்கு வழங்கிய என் சாத்தூர் சட்டமன்றத் தொகுதி மக்கள் ஒவ்வொருவருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கும், நிர்வாகிகளுக்கும், என் குடும்ப நண்பர்கள், உறவினர்கள், என் மனைவி, மகன், மகள் உள்ளிட்ட அனைத்து மக்களுக்கும் ஒன்றிய கழகச் செயலாளர்கள், நகரச் செயலாளர், இளைஞரணி நிர்வாகிகள் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைய மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் எனக்கு பேச வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை நன்றியைச் சொல்கிறேன்.

சமூகத்தில் எல்லா தரப்பிலும், எல்லா துறைகளிலும், எல்லா காலக்கட்டத்திலும் ஆதிக்கம் இருந்துள்ளது. தொழில் துறையை எடுத்துக் கொண்டால் வளர்ச்சிக்கு பெரும் தொழில்கள் அவசியம். அதேசமயம், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களை அவை அழித்துவிடாமல் பாதுகாப்பதும் ஓர் அரசுக்கு முக்கியமான பணி. தொழில் துறையில் பெரும் தொழில்களின் ஆதிக்கத்திலிருந்து குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களைக் காப்பது கடமை. திராவிட முன்னேற்றக் கழகக் காலம் முழுவதும் இதை அக்கறையோடு அணுகி செயல்படுத்தி வந்துள்ளது.

1967 முதல் 1977 வரையிலான தி.மு.க. ஆட்சியில் பெரும் தொழில்கள் வளர்ச்சியடைந்த அளவைவிட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களின் வளர்ச்சி அடைந்த விகிதம் அதிகம். நில உச்சவரம்புச் சட்டத்தின்மூலம் உபரி நிலங்களை விவசாயிகளுக்குக் கொடுத்து, நில உரிமைகள் சமத்துவத்தையும், அதிகாரப் பரவலாக்கத்தையும் உறுதிசெய்தவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். அதேபோல குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களை உருவாக்கி, ஊக்கப்படுத்தி பாதுகாத்த வகையில் தொழில் துறையிலும் அதிகாரப் பரவலாக்கத்தை தலைவர் கலைஞர் அவர்கள் உறுதி செய்தார்கள்.

இன்று இந்தியாவில் ஒட்டுமொத்த பொருளாதாரத்தில் மராட்டிய மாநிலம் முதன்மையாக இருக்கலாம். ஆனால், அவர்களைவிட தொழிற்சாலைகளின் எண்ணிக்கையில் தமிழ்நாடு தான் முதலில் இருக்கிறது. அதற்கு சிறு, குறு, நடுத்தர தொழிற்சாலைகளின் பங்களிப்பு மிக, மிக முக்கியமானது. ஒவ்வோர் ஆட்சியிலும் இதற்காக பணியாற்றி வளர்த்தெடுத்துள்ளோம்.

மிக முக்கியமாக 20062011 காலக்கட்டத்தில், 2006 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 21,265; 2011 ஆம் ஆண்டு 36,848. ஐந்தாண்டு காலத்தில் 15,583 தொழிற்சாலைகளை அதிகப்படுத்தி காட்டியது தி.மு.க. ஆட்சி. இந்த ஆட்சியில் துணை முதலமைச்சராகப் பணியாற்றியபோது, தொழில் துறையையும் பொறுப்பில் வைத்திருந்தவர், எங்கள் தலைவர் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் என்பதை பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன்.

**இந்தியாவில் கழக ஆட்சியில் 2–வது இடம்!**

திராவிட மாடல் ஆட்சியில் MSME துறைகளின் வளர்ச்சிக்கு பொற்காலமாக விளங்கியது. முந்தைய ஆட்சியில் 55,230 தொழில்முனைவோர்கள் உருவாக்கப்பட்டனர். திராவிட மாடல் ஆட்சியில் 81,598 தொழில்முனைவோர்கள் உருவாக்கப்பட்டனர். அவர்களுக்கு அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடி திட்டம், கலைஞர் கைவினைத் திட்டம் உள்ளிட்ட 6 திட்டங்கள்மூலம் 2,512 கோடி ரூபாய் மானியம் வழங்கப்பட்டது. தமிழ்நாட்டில் 652021 நிலவரப்படி 3,10,610 MSME நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டு, 33,47,447 நபர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டது. கழக ஆட்சிக் காலத்தில் 752021 முதல் 2822026 வரையிலான காலக்கட்டத்தில் 41,18,410 MSME நிறுவனங்கள் Udyam பதிவு இணையதளத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு, 2,97,33,721 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. பதிவு செய்யாத MSME நிறுவனங்களையும் கணக்கில் எடுத்துக்கொண்டால், இந்திய அளவில் தமிழ்நாடு MSME துறையில் இரண்டாவது இடம் வகிக்கும் என்கிற மகத்தான சாதனை படைத்தது திராவிட மாடல் அரசு. MSME துறைக்கு 20162021 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்ட அதிகபட்ச ஆண்டு ஒதுக்கீடு ரூ.543 கோடி. அதே காலக்கட்டத்தில் மொத்த ஒதுக்கீடு ரூ.2,334 கோடியாக மட்டுமே இருந்தது. எங்கள் தலைவர் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் 20212025 காலக்கட்டத்தில் நிதியொதுக்கீட்டினை பன்மடங்கு உயர்த்தி, அதிகபட்சமாக ஆண்டு நிதி ஒதுக்கீடு ரூ.1,911 கோடியாகவும், ஐந்தாண்டுகளில் மொத்த ஒதுக்கீடு சுமார் ரூ.6,062 கோடியாகவும் உயர்த்தியது. முந்தைய ஆட்சியைவிட இது அதிகபட்சமாகும். ஆண்டு ஒதுக்கீட்டில் 352 விழுக்காடு வளர்ச்சியையும், மொத்த ஒதுக்கீட்டில் 3.45 மடங்கு உயர்த்தி ஒதுக்கீடு செய்தார் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள். ஒரு தொழில் தொடங்க, பல உரிமைகள் வாங்க வேண்டிய நிலையுள்ளது. அவற்றிற்காக, தொழில்முனைவோர்கள் அலைந்து திரிய வேண்டிய சூழல் இருந்தது.

**ஆதி திராவிடர் தொழில் முனைவோர்!**

அவர்களது துயரத்தைப் போக்க, எளிதாக தொழில் தொடங்கும் வகையில் 200க்கு மேற்பட்ட உரிமைகளை, தொழில் நிறுவனங்கள் ஒரே இடத்தில் பெற்றிடும் ஒற்றை சாளர முறை,

## கழக ஆட்சியில் குறு, சிறு தொழில்கள் வளர்ச்சியடைந்தன!

2.0 திட்டம் அறிமுகம் செய்யப்பட்டு, அதன்மூலம் திராவிட மாடல் ஆட்சியில் 1,03,123 மனுக்கள் பெறப்பட்டு, சுமார் 94,440 மனுக்களுக்கு வெளிப்படையாக ஒப்புதல் வழங்கப்பட்டு சாதனை எய்தப்பட்டது. இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத திட்டமான ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரை தொழில்முனைவோர்களாக உருவாக்கும் அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் திராவிட மாடல் ஆட்சியில் செயல்படுத்தப்பட்டது.

இந்தத் திட்டத்தின்கீழ் ரூ.402,56,00,000 மானியத்துடன் ரூ.746 கோடியே 53 இலட்சம் வங்கிக் கடனுதவி வழங்கப்பட்டு, 4,083 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் தொழில் முன்னோடிகளாக உருவாக்கப்பட்டனர். இத்துறைக்கு முதுகெலும்பாக உள்ளவை SIDCO தொழிற்பேட்டைகள். ரத்தநாளங்களாக உள்ள startup நிறுவனங்கள் அவை இரண்டிலும் தீவிர கவனம் செலுத்தியது திராவிட மாடல் ஆட்சி.

**புத்தாக்கத் தொழில் கழக ஆட்சியில் முதலிடம்!**

திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, கடலூர், திருவண்ணாமலை, திருச்சி, புதுக்கோட்டை, திருவாரூர், சேலம், நாமக்கல், மதுரை, திருநெல்வேலி, தூத்துக்குடி, விழுப்புரம் ஆகிய 14 மாவட்டங்களில் 464 கோடியே 86 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 809.28 ஏக்கர் பரப்பளவில் 18 சிட்கோ தொழிற்பேட்டைகள் தொடங்கப்பட்டன. புதிய கண்டுபிடிப்பாளர்களை, இளைஞர்களை தொழில் முனை வோர்களாக மாற்ற கழக ஆட்சியில் Startup TN என்ற திட்டம் தொடங்கப்பட்டது. எந்த அரசியல் பார்வையும் இல்லாமல், சிபாரிசும் இல்லாமல் start up நிறுவனங்களுக்காகவே சேவை செய்த ஒருவரை கழக அரசு CEO ஆக நியமித்து, அதன்விளைவாக அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் startup



தரவரிசைப் பட்டியலில் இந்திய அளவில் கடைசி தரவரிசையில் இருந்த தமிழ்நாடு, அதிலிருந்து முன்னேறி மூன்றாம் இடமான Leader விருதினைப் பெற்றது.

அதன்பின் தரவரிசைப் பட்டியலில் Startup TN நிறுவனம் இந்திய அளவில் முதலிடம் பிடித்து சிறந்த செயல்பாட்டாளர் என்ற விருதினைப் பெற்றது. ஒன்றிய அரசின் நிதி ஆயோக் அமைப்பின் சிறந்த புத்தாக்க சூழல் கொண்ட மாநிலங்களின் பட்டியலில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக இடம்பெற்றுள்ளது. இன்று அதன் நிலை என்னவென்று தெரியவில்லை. அந்த இயக்கத்தினை நம்பி தொழில் தொடங்கிய இளைஞர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதும் தெரியவில்லை. (மணியடிக்கப்பெற்றது) கொஞ்சம் time கொடுங்கள்.

எங்கள் ஆட்சியில் 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடத்தப்பட்ட உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் MSME துறையின்மூலம் 5,068 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டது. இதன்மூலம் 1,21,403 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் வகையில் 31,201 கோடியே 76 இலட்சம் ரூபாய் முதலீட்டில் 2,911 நிறுவனங்கள் தொடங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள ஒப்பந்தங்களின் நிலை என்ன என்பதை பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

இந்த அரசு பொறுப்பேற்றதிலிருந்து பெருந்தொழில் நிறுவனங்கள் மற்ற மாநிலங்களுக்கு சென்றவண்ணம் உள்ளன. அவ்வாறு, திட்டங்களை நீங்கள் ரத்து செய்துவிட்டீர்களா அல்லது பெயரை மாற்றியுள்ளீர்களா? இதுதான் இந்த அரசின் 100 நாள் சாதனையாக உள்ளது. இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டது MSME நிறுவனங்கள்தான் என்பதை இந்த அரசு புரிந்து கொள்ள வேண்டும். அமெரிக்காவின் பொருளாதாரக் கொள்கை, ஈரான்அமெரிக்கா போர் ஆகியவற்றால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளது MSME நிறுவனங்கள்தான். உக்ரைன்ரஷ்யா போரால் நமது MSME நிறுவனங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டபோது எங்கள் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, MSME நிறுவனங்களை அழைத்து பேசி அவர்களுக்கு தேவையான மூலப்பொருட்களை பெற அனைத்து உதவிகளும் வழங்கப்பட்டது. நாடு முழுவதும் சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்பட்டபோதுகூட மாற்று எரிசக்தி பயன்படுத்தியவர்களுக்கு அனுமதி விலக்கு, மின் கட்டண சலுகை ஆகியவற்றை வழங்கியது திராவிட மாடல் ஆட்சியில்தான். அதேபோல் உங்கள் ஆட்சியில் நடைபெற்றதாகத் தெரியவில்லை. MSME நிறுவனங்களின் கோரிக்கைகள் உங்கள் காதுகளில் வரவேயில்லை.

**த.வெ.க. ஆட்சியில் எந்தத்திட்டமும் இல்லை!**

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் சிறு, குறு தொழில் முனைவோருக்கு கலைஞர் கைவினைத் திட்டம், மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம், தமிழ்நாடு கடன் உத்தரவாதத் திட்டம், குறுங்குழும மேம்பாட்டுத் திட்டம், micro clusters, பெருங்குழும மேம்பாட்டுத் திட்டம், தங்க நகை மற்றும் வெள்ளி குழுமம், வெள்ளிக் கொலுசு உற்பத்தி வளாகம், தொழிலாளர் தங்கும் விடுதிகள், தமிழ்நாடு உணவு பதப்படுத்துதல் மற்றும் வேளாண் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம், அடுக்குமாடி தொழில் வளாகங்கள், சிட்கோ தொழில்மனை விலை குறைப்பு, ஒற்றைச் சாளர இணையதளம்,

நான் recordஐ வைத்துதான் பேசிக்கொண்டிருக்கிறேன். என்ன இருந்ததோ அதை எடுத்துத் தான் நான் பேசிக்கொண்டிருக்கிறேன். நான் ஒன்றும் உண்மைக்கு மாறாக இருப்பதைச் சொல்லவில்லை. இதற்கு முன்பு நாங்கள் என்ன நடந்தது, என்ன செய்தோம் என்ற சாதனையைத்தான் பேசிக்கொண்டிருக்கிறேன்.

**கோவில்பட்டியில் தீப்பெட்டி தொழிலை ஆய்வு செய்த எங்கள் முதலமைச்சர்!**

ஒற்றைச் சாளர இணையதளம் 2.0 தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் என எண்ணற்ற திட்டங்கள் MSME நிறுவனங்களுக்கு கொண்டுவரப்பட்டன. இந்த ஆட்சியில் பெயர் மாற்றத்தைத்தவிர, இத்துறைக்கு குறிப்பிடத்தக்க எந்தத் திட்டமும் அறிவிக்கப்படவில்லை. நீங்கள் கொடுத்துள்ள புத்தகத்திலும் பார்த்தோம், ஒன்றும் காணவில்லை.

அதேபோன்று, நான் விருதுநகர் மாவட்டம், சாத்தூர் தொகுதியிலிருந்து புதியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்துள்ளேன். எங்கள் பகுதி வானம் பூமி; எந்த நீர்ப்பாசனமும் கிடையாது. விவசாயப் பணிகள் என்பது மிகவும் குறைந்த நாட்கள் தான் நடைபெறும். அதுவும் மழை சரிவர பொழியவில்லை என்றால், அதுவும் நடக்காது. அதனால்தான் எங்கள் பகுதியை ‘கந்தக பூமி’ என்று சொல்வார்கள். எங்கள் பகுதியில் தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழில்தான் பிரதானத் தொழிலாக விளங்கி வருகிறது. அதுவும் குறிப்பாக சொல்லவேண்டுமென்றால், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் பிறந்த 1924 ஆம் ஆண்டுதான் எங்கள் பகுதியில் தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழில் தோன்றியது. அன்று முதல் இன்றுவரையிலும் பெண்கள் இந்தத் தொழிலை நம்பித்தான் வாழ்வாதாரத்தை நடத்தி வருகிறார்கள். பெரும்பாலும் தீப்பெட்டித் தொழிலிலும், பட்டாசுத் தொழிலிலும் பெண்கள் தான் வேலை செய்கிறார்கள்.

தற்போது Chinaவிலிருந்து cigarette lighter மற்றும் உதிரிப் பாகங்கள் வருகையினால் மிகவும் நலிவடைந்து இன்றைக்கு தீப்பெட்டி தொழிற்சாலைகளில் தொழிலாளர்களுக்கு மூன்று, நான்கு நாட்கள்தான் வேலை தரப்படுகிறது. திராவிட மாடல் ஆட்சியில் தீப்பெட்டி தொழில் நடத்துபவர்கள் எங்கள் அமைச்சர்கள் மூலமாக அன்றைய முதல்வராக இருந்த தளபதி முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் எட்டயபுரம் கிராமம், கோவில்பட்டி factoryக்கும் நேரடியாக visit செய்து, அதனுடைய குறைகளை நிவர்த்தி செய்து, Chinaவிலிருந்து வரக்கூடிய plastic cigarette lighter—நலிவடைந்த தீப்பெட்டி தொழிலை காப்பற்றவேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்திக் கூறினார்கள்.

முன்னாள் முதலமைச்சர் அவர்கள், அமைச்சர் பெருமக்களோடு கோவில்பட்டிக்குச் சென்று தீப்பெட்டி தொழிற்சாலையைப் பார்வையிட்டு, தொழிலாளர்களுடன் கலந்துரை யாடி, தொழில் முனைவோர்களையும் சந்தித்து, அன்றையதினம் ஒன்றிய அரசு cigarette lighter தடைசெய்ய பரிந்துரைக் கடிதம் அனுப்பினார்கள்.

அதேபோன்று பட்டாசுத் தொழிற்சாலைகளில் தொடர்ந்து ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. ஏற்கெனவே suspend செய்யப்பட்ட பல தொழிற்சாலைகள் இப்போது revoke செய்யப்பட்டநிலையில், தொடர்ந்து நடைபெறும் ஆய்வுகளின் காரணமாக மீண்டும் பல தொழிற்சாலைகள் suspend செய்யக்கூடிய நிலை உருவாகியுள்ளது. எனவே தொழிற்சாலைகள் மற்றும் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்காதவகையில் ஆய்வுகளை நடைமுறைப்படுத்தி, தேவையற்ற suspendகளை தவிர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

DRO உரிமம் பெற்ற தொழிற்சாலைகளில் தீப்பெட்டி திரி செய்யும் தயாரிப்புக்கு கூடுதல் அறை வசதி செய்துதரவேண்டும். இதற்கு முன்பு பிற மாவட்டங்களில் 5 rooms கொடுக்கிறார்கள். எங்கள் மாவட்டங்களில் 2 rooms தான் கொடுக்கிறார்கள். அதை 5 rooms ஆக கொடுத்தால், வெளியில் வைத்து திரி செய்வது குறையும். அந்தத் தொழிலைப் பாதுகாக்கவேண்டும்.

**கைத்தறித் தொழிலை பாதுகாக்க வேண்டும்!**

அதேபோன்று கைத்தறித் துறையில் விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம் தாலுகா, சத்திரப்பட்டி, சமுசிகாபுரம், சங்கரபாண்டியபுரம் ஆகிய மூன்று கிராமங்களில் சுமார் 120 மருத்துவ துணி உற்பத்தி நிறுவனங்கள் உள்ளன.

இத்தொழிலில் நேரடியாக மூன்றாயிரம் தொழிலாளர்கள் மற்றும் மறைமுகமாக பத்தாயிரம் தொழிலாளர்கள் வேலை செய்து வருகிறார்கள். சுமார் 60 வருடங்களுக்கு முன்பு, இந்தத் தொழில் துவங்கப்பட்டு, இப்பகுதி முழுவதும் மக்களின் வாழ்வாதாரமாக சிறப்பாக உள்ளது.

இந்நிலையில் கடந்த 15 ஆண்டுகளாக மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் வசமிருந்து, கழிவுநீரைச் சுத்தப்படுத்தி, வெளியேற்ற வேண்டும் என்பதை வலியுறுத்தி பல கடிதங்கள், பல ஆலோசனைக் கூட்டங்கள் நடைபெற்றன. இதன்விளைவாக பல நிறுவனங்கள் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க ஏற்பாடு செய்தனர். இதற்குப் பொது மக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். எனவே, நாங்கள் 105 பேர் சேர்ந்து, பொது சுத்திகரிப்பு அமைப்பு CETP (Common Effluent Treatment Plant) ஏற்படுத்த 6 ஏக்கர் நிலம் வாங்கினோம். அந்த இடத்தில் மேற்படி அமைப்பை ஏற்படுத்த ஆரம்ப கட்ட பணியைத் துவக்கியுள்ளார்கள்.

அரசே பொது சுத்திகரிப்பு நிலையம் ஏற்படுத்த இராஜபாளையம் தாசில்தார் அவர்களைத் தொடர்புகொண்டு, நிலம் கையகப்படுத்த ஒத்துழைக்க வேண்டினோம். அதற்கு அவர்கள் அரசியார்பட்டி பஞ்சாயத்து, பிள்ளையார்குளம் பஞ்சாயத்து, சர்வே எண் 157, சுமார் 98 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்படுத்த ஆய்வு கொண்டார்கள்.

அந்த இடத்தில் அரசு செலவில் பொது சுத்திகரிப்பு அமைப்பு CETP ஏற்படுத்த வேண்டும். CETP அமைத்தால் மட்டுமே கழிவுநீரைச் சுத்தப் படுத்தி, அதன்மூலம் மேற்கண்ட மூன்று கிராமங்களிலுள்ள 120க்கும் மேற்பட்ட மருத்துவத்துணி உற்பத்தி நிறுவனங்கள் பிழை ப்பார்கள் என்று இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன்.

**தொகுதி கோரிக்கைகள்:**

சாத்தூர் தொகுதி, அரசு மருத்துவமனைக்கு ஒருங்கிணைந்த எக்ஸ்ரே மற்றும் CT ஸ்கேன் வசதி, புதிய கட்டடத்துடன் அமைத்துத் தர வேண்டும்.

சாத்தூர் தொகுதி, இராஜபாளையம் ஊராட்சி, சத்திரப்பட்டி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக தரமுயர்த்திட வேண்டும். சோழாபுரம் துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக தரமுயர்த்த வேண்டும்.

சாத்தூர் ஊராட்சி, மேட்டமலை கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டடம் கட்டித் தர வேண்டும். புது சூரங்குடி ஆரம்ப சுகாதார நிலையத்தை தரமுயர்த்த வேண்டும். ஓ. மேட்டுப்பட்டி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்து தர வேண்டும்.

சாத்தூர் தொகுதி, சாத்தூர்நென்மேனிநாகலாபுரம் சாலையில், சாத்தூர் இரயில்வே நிலையம் அருகில் இரயில்வே மேம்பாலம் அமைத்து தர வேண்டும். சாத்தூர்சிவகாசி சாலையை நான்கு வழிச் சாலையாக மாற்றித் தர வேண்டும்.

சாத்தூர் தொகுதி, செவல்பட்டி, சாத்தூர், திருவேங்கடபுரம், சங்கரன்கோயில், ஆலங்குளம், கீழான்மறைநாடு ஆகிய ஊர்களுக்கு தரை பாலத்தை உயர்மட்ட பாலமாக மாற்றித் தர வேண்டும்.

சாத்தூர் தொகுதி, குகன்பாறையில் இருந்து கீழான்மறைநாடு செல்லும் சாலையிலுள்ள தரைப் பாலத்தை உயர்மட்ட பாலமாக மாற்றியமைக்க வேண்டும். மேற்கண்ட சாலையும், செவல்பட்டி கிராமத்தில் PSR கல்லூரி செல்லும் சாலையும் சந்திக்கும் இடத்தை மேம்படுத்த வேண்டும்.

**சாத்தூர் – தாயில்பட்டி சாலையை சீரமைத்துத் தாரீர்!**

சாத்தூர் தொகுதி, குகன்பாறை, கிராமத்தில் அமைந்துள்ள தரைபாலத்தை உயர்மட்ட பாலமாக மாற்றித் தர வேண்டும். சின்னகொல்லப்பட்டியிலிருந்து அய்யம்பட்டி செல்லும் சாலையை அகலப்படுத்தித் தர வேண்டும். சாத்தூரில் இருந்து தாயில்பட்டி செல்லும் சாலையை சீரமைத்து விரிவாக்கம் செய்து தர வேண்டும்.

சாத்தூர் தொகுதி, ஒத்தையால் மற்றும் தூங்காரெட்டிபட்டி ஆகிய கிராமங்களிலுள்ள வளைவு பகுதியை மேம்படுத்தித் தர வேண்டும்.

சாத்தூர் தொகுதி, வெம்பக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், சல்வார்பட்டி ஊராட்சியில் இறவார்பட்டியிலிருந்து அச்சங்குளம் செல்லும் வழியில் தார்ச்சாலை அமைத்து தர வேண்டும். வைப்பாற்றில் பாலம் அமைத்து தர வேண்டும்.

சாத்தூர் தொகுதி, வெம்பக்கோட்டையில் தீக்காய பிரிவுடன்கூடிய அரசு மருத்துவமனை அமைத்து தர வேண்டும்.

சாத்தூர் தொகுதி, வெம்பக்கோட்டை, வைப்பாற்றிலுள்ள முள்செடிகளை தூரோடு அகற்ற வேண்டும். வெம்பக்கோட்டை பகுதிக்கு பேருந்து நிலையம் அமைத்து தர வேண்டும்.

சாத்தூர் தொகுதி, வேண்டான்குளம் கண்மாயிலுள்ள கருவேல மரங்களை அகற்றி தூர்வாரப்பட வேண்டும்.

சாத்தூர் தொகுதி, படந்தால் ஊராட்சியிலிருந்து சாத்தூர் நகர் பகுதி வரை வாறுகால் அமைத்து தர வேண்டும். ஆலங்குளம் அரசு சிமெண்ட் தொழிற்சாலை இயங்கிட நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

சாத்தூர் தொகுதி, சாத்தூர் நகரில் புதிதாக அமையும் பேருந்து நிலையம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்திட வேண்டும். நந்தவணப்பட்டி தெருவில் நடைமேடை அமைப்பதற்கு தொகையை ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

சாத்தூர் நகராட்சியில் புதிய காய்கறி மார்க்கெட் கடைகள் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், வெம்பக்கோட்டை ஒன்றியம், தாயில்பட்டி ஊராட்சிக் குட்பட்ட கோட்டையூர் பெரிய கண்மாயைத் தூர்வாரி சீரமைத்துத் தர வேண்டும்.

சாத்தூர் தொகுதி, சாத்தூர் கோட்டத்திற்குத் துணை பண்டக சாலை அமைத்துத் தர வேண்டும். வாரிய வாகனம் பொருட்கள் மின் கம்பங்கள் ஏற்றி இறக்குவதற்கு லாரி வசதி ஏற்படுத்தி தர வேண்டும். சாத்தூர் கோட்டம் செயற்பொறியாளரின் அலுவலக பயன்பாட்டிற்கு கார் வசதி செய்திட வேண்டும்.

சாத்தூர்தொகுதி, துணைமின்நிலையத்திற்கு இரண்டுவழி மின்பாதை அமைத்து தர வேண்டும். செயற்பொறியாளர் அவர்களுக்குப் புதிய கட்டடம் அமைத்துத் தர வேண்டும்.

இவ்வாறு கழக உறுப்பினர் அ.கடற்கரைராஜ் பேசினார்.